RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s758

OPEN ACCESS

# செல்லாத பணம்: வாழ்க்கையின் பன்முகப் பரிமாணங்களும் புரிதல்களும்

**ஜ. சிவகுமார்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, சென்னை-600106. தமிழ்நாடு, இந்தியா.

# Selllaatha Panam: Multiple Dimensions and Understandings of Life

**J. Sivakumar** [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: sivakumar@dgvaishnavcollege.edu.in

Received: 29-12-2021
Revised: 06-05-2022
Accepted: 13-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

It was with the rise of Dalit literature that people, events, culture and language, which had not been given importance until now, were recorded. These Dalit literary personalities also recorded the people and culture that they forgot to record. Although he is a Dalit man, in his fiction he has recorded Dalit women, children, puzzle painters, drummers along with their artistic and living environment in his novels and short stories. Tamilnadu Dalit legends, especially novels, are mostly his history, his family history, and a work that explains his status, while Imayam has objectively recorded the lives of personalities who are not important in Dalit legends. When he looks away like this, it becomes more observation than emotion. He has written a novel about the tragic feelings of a non-Dalit family. This novel published in 2018 won the Sahitya Academy Award for 2020. Revathi, who has completed her engineering studies and has a good work order in hand, is adamant that she will not marry anyone other than Ravi, a Burmese refugee who is inferior to her in terms of education, economics, family honor and caste. Therefore, the purpose of this article is to investigate the multiple dimensions and understandings of this novel.

**Keywords:** Selllaatha Panam, Dalit, Sahitya Academy Award, Imayam

## முன்னுரை

தலித் இலக்கிய எழுச்சியினோடுதான் இதுவரை முக்கியத்துவம் தரப்படாத மனிதர்களும் நிகழ்வுகளும் பண்பாடும் மொழியும் பதிவு செய்யப்பட்டன. இந்தத் தலித் இலக்கிய ஆளுமைகளும் பதிவு செய்ய மறந்த மனிதர்களையும் பண்பாட்டையும் பதிவு செய்தவர் இமையம் (Imayam, 2021; Imayam, 2008). இவர் ஒரு தலித் ஆணாக இருந்தாலும் தனது புனைவுகளில் தலித் பெண்கள் (ஆறுமுகம்), (வீடியோ மாரியம்மன்) சிறார்கள், (மண்பாரம்) புதிரை வண்ணார்கள், (கோவேறு கழுதைகள்) பறைக் கூத்தாடிகள் (செடல்) ஆகியோரை அவர்களது கலை மற்றும் வாழ்வியல் சூழலோடு தன்னுடைய நாவல்களிலும் சிறுகதைகளிலும் பதிவு செய்துள்ளார் (Imayam, 2006; Imayam, 2004; Imayam, 1999; Imayam, 1998).

தமிழகத் தலித் புனைவுகள் - குறிப்பாக புதினங்கள் - பெரும்பாலும் தன் வரலாறாக / தன் குடும்ப வரலாறாக, தன் நிலையை விளக்கும் படைப்பாக இருக்க, இமையம் அவர்கள் தலித் புனைவுகளில் முக்கியத்துவம் பெறாத ஆளுமைகளின் வாழ்நிலையைப் புறநிலையில் நின்று பதிவு செய்துள்ளார். இவர் இப்படி விலகி நின்று பார்க்கும்போது உணர்ச்சியைவிட கூர்ந்து நோக்கல் அதிகமாகிறது. இவர் தலித் அல்லாத ஒரு குடும்பத்தின் துன்பியல் உணர்வுகளை மையமாக வைத்து

செல்லாத பணம் நாவலை எழுதியுள்ளார். 2018ஆம் ஆண்டு வெளிவந்த இந்நாவல் 2020ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி பரிசு பெற்றுள்ளது.

பொறியியல் படிப்பை முடித்துக் கையில் நல்ல வேலைக்கான பணி ஆணையுடன் இருக்கும் ரேவதி, தன்னைவிடக் கல்வி, பொருளாதாரம், குடும்ப கௌரவம், சாதி என அனைத்திலும் குறைவாக உள்ள பர்மா அகதியான ஆட்டோக்கார ரவியைத் தவிர வேறொருவனைத் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக நிற்கிறாள். குடும்பத்தினர் யாருடைய சமாதானத்தையும் ஏற்க அவள் தயாராக இல்லை. குடும்பத்தார் அவள் இறந்துவிடக் கூடாது என்பதற்காக வேண்டா வெறுப்பாக ரவியுடன் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஏழாண்டுகள் கழித்து ரேவதி தீக்குளித்துவிட்டாள் என்ற செய்தியை ரவி அவளது தாய்க்கு கைபேசி மூலம் தெரிவிக்கிறான். இது கொலையா? தற்கொலையா? அல்லது எதிர்பாராமல் நடந்த விபத்தா? இதற்கு யார் காரணம்? என்பது நோக்கியே பல பாத்திரங்களின் பல்வேறு அவதானிப்பிகளினூடாக இந்நாவல் விரிகிறது. இங்கு பாத்திரங்களின் பொருளாதாரம், பாலினம், சமூகத் தகுதிக்கு ஏற்ப அவர்களின் புரிதல்களும் உரையாடல்களும் அமைந்துள்ளன. எனவே இந்நாவலின் பன்முகப் பரிமாணங்கள் குறித்தும் புரிதல்கள் குறித்தும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## ரேவதி

சிறு வயது முதலே நல்ல படிப்பு, ஒழுக்கம் என வளர்ந்தவள் ரேவதி. “காலேஜில் படித்துவிட்டு வரும்வரை தங்கம் என்று பெயர் எடுத்த பெண்ணுக்கு வீட்டில் தங்கியிருந்த ஒன்றிரண்டு மாதங்களில் புத்தி ஏன் தடுமாறிப் போயிற்று” என ரேவதியின் தாய் கூறுவதன் மூலம் ரவிமீது காதல் வயப்பட்டதை அறியலாம் (Imayam, 2021). தன் தாய், தந்தை, அண்ணன், தோழி எனப் பலரும் ரவி எந்த வகையில் உனக்குப் பொருத்தமானவன்? என்று தர்க்கரீதியாகப் பல கேள்விகளைக் கேட்கின்றனர். அப்பொழுதெல்லாம் தர்க்கரீதியாகப் பதில் சொல்லத் தெரியாத அவள் தீயில் வெந்து “உடல் முழுவதும் வழண்டுபோய் தோலுரிக்கப்பட்ட கோழி” மாதிரி மருத்துவமனையில் கிடக்கும்போது அவனை ஏன் பிடித்தது என்னும் காரணத்தைச் சொல்கிறாள் (Imayam, 2021). “நெஞ்சிலயும், ரெண்டு கையிலயும் பச்ச குத்திக்கிட்டு வந்து காட்டுனது. பாக்குறப்பலாம் 'நீ என்னெக் கல்யாணம் கட்டிக்கலன்னா செத்திடுவன்'னு சொல்லிக் கைய பிளேடால கிழிச்சிக்கிட்டது காரணமா இருக்கும் 'ஐயோ பாவம்'ன்னு நெனச்சன். அவ்வளவுதான்”. தனக்காகத் தன் உயிரையும் தியாகம் செய்ய நினைப்பவனைத் தான் எதற்காகவும் ஏமாற்றிவிடக்கூடாது என்ற இரக்கக் குணத்தாலும் ரவி தன் வீட்டுப் பக்கம் அடிக்கடி வருவதால் தனது குடும்பத்தார் ரவியால் அசிங்கப்படக்கூடாது என்பதற்காகவும் தன் குடும்பத்தாரிடம் ரவியையே தனக்குத் திருமணம் செய்து வைக்கச் சொல்கிறாள் ரேவதி (Imayam, 2021).

ரவியின் வீட்டில் அவனது வறுமையால், குடிநோயால் ரேவதிக்கு நிம்மதியான தூக்கம் கூட கிடைக்கவில்லை ரேவதி தான் வேலைக்குச் சென்று கை நிறைய சம்பாதித்தால் தங்கள் துன்பம் தீரும் என்று நினைக்கிறாள். ஆனால் ரவி தனது தாயின் தூண்டுதலாலும் தனது சந்தேகப் புத்தியாலும் ரேவதி வேலைக்குப் போவதைத் தடுக்கிறான்.

பிறகு ரவியின் ஆட்டோவுக்கு டியூ கட்டுவது போன்ற பணத் தேவைகளுக்காக ரேவதி தன் தாய் வீட்டுக்கு வருவது, தாய் பண உதவி செய்வது, தந்தையும் அண்ணனும் இதனைக் கண்டும் காணாமல் இருப்பது, ரவியின் ஊதாரித்தனத்தாலும் குடிநோயாலும் ரேவதி சித்திரவதை அனுபவிப்பது என்று நாட்கள் நகர்கின்றன. பின்னர் தீயில் வெந்துப்போய் மருத்துமனையில் கிடக்கும்போது அவள் தனது தாயிடம் “நடந்ததெல்லாம் ஆக்ஸிடண்டு. விட்டுத்தள்ளு. யாரையும் குத்தம் சொல்லாத. யாரையும் திட்டாத. நான் வீட்டுக்கு வந்ததும் வேலக்கிப் போவணும். அவ்வளவுதான். அதுதான் எனக்கு இப்ப ஆச” என்று சொல்கிறாள் (Imayam, 2021). குடும்பத்தாரின் பாசத்தைப் புரிந்துகொள்ளாமல் தனது அவசர முடிவால் தனது குடும்பத்தாரையும் துன்பத்துக்கு ஆளாக்கிவிட்டோமே என்ற குற்றவுணர்ச்சியால் இவ்வாறு சொல்லும் ரேவதி தான் இறக்கும் வரை ரவி மீது எவ்விதக் குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை.

ரேவதியின் குடும்பத்தாரும் குடும்ப உறவுகளும் குடும்ப நண்பர்களும் ரவிதான் ரேவதியைக் கொளுத்தியிருக்க வேண்டும் என்று நம்புகிறார்கள் ரவியோ அவளே தன்னை எரித்துக் கொண்டதாகக் கூறுகிறான். ஆனால் ரேவதியோ காவல்துறையினரிடம் அது எதிர்பாராத விதமாக நடந்த விபத்து; இதற்கு யாரும் காரணமில்லை என்று வாக்குமூலம் அளிக்கிறாள். தன் திருமண வாழ்க்கைமீது ஏற்பட்ட வெறுப்பினால்தானோ என்னவோ ரேவதி தான் இறக்கும் வரையிலும் தனது கணவனையோ பிள்ளைகளையோ கணவன் குடும்பத்தாரையோ பார்க்க வேண்டும் என்று கூறவே இல்லை ஆனால் தனது தாய், தந்தை, அண்ணனைக் காண விரும்புகிறாள்.

## அமராவதி

ரேவதியின் வலியை, மனநிலையை இந்த நாவல் முழுக்க அம்பலப்படுத்துபவர் அமராவதியே (ரேவதியின் அம்மா) தன் மகள் அவளது தகுதிக்குக் குறைவான போக்கிரியைக் காதலிக்கிறாளே என்று அவளிடம் ஆத்திரப்படுவது, ரவியின் குடும்பத்தாரிடம் போய் 'உங்கள் வீட்டுப் பெண்ணுக்கு இப்படி நடந்தால் சும்மா இருப்பீர்களா?' என்று கேட்பது, எங்கே தன் பெண் ஓடிப்போய் குடும்ப மானத்தை வாங்கிவிடுவாளோ? அல்லது தனது உயிரைப் போக்கிக் கொள்வாளோ? என்று தினந்தினம் அச்சத்துடனே கடப்பது, தன் பெண்ணின் துயரநிலையைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல் ரவிக்கே அவளைத் திருமணம் செய்து அனுப்பிவிடலாம் என்று நடேசனிடமும் (ரேவதியின் அப்பா) முருகனிடமும் (ரேவதியின் அண்ணா) கெஞ்சி, அவர்களும் 'எதையோ பண்ணித் தொல' என்று சொல்ல ரேவதி - ரவி திருமணத்தை நடத்தி வைப்பது எனத் தொடர்கிறார்.

முதல் ஆறு மாதம் தன் மகளுடன் பேச்சுவார்த்தை இல்லை. ஆனால் அவள் கரு தரித்த நாள் முதலே செலவு யாரு பார்ப்பது என்று ரேவதியை ரவி அடித்தான். இந்தத் தகவல் தெரிந்த அமராவதி தன் மகளை மருத்துவமனையில் சேர்க்கிறாள். இரண்டு குழந்தைகள் பிறந்தபோதும் பிரசவம் பார்த்து தாய் வீட்டில் பத்து நாள் தங்கவைத்து அனுப்புகிறாள் அமராவதி. திருமணத்தின்போது ரேவதிக்கு இருபது பவுன், இரண்டு குழந்தைகளுக்கும் ஆளுக்கு ஒரு பவுன் போடுகிறாள். ஆனால் ரவி அதையும் விற்றுவிட்டு ஆட்டோவுக்கு டியூ கட்ட முடியாமல் இருக்கும்போதும் அமராவதிதான் உதவுகிறாள். நடேசனும் முருகனும் 'எந்த எழவாவது எடு' என்று சொல்லி பணத்தைத் தூக்கி ஏறிய, மானம் மரியாதை பார்க்காமல் தன் பெண்ணுக்கு உதவுவதற்காக அந்தப் பணத்தைப் பொறுக்கி எடுப்பாள் அமராவதி. 'பெற்றக் கடனுக்கு அவள் (ரேவதி) வரலாம், போகலாம். ஆனால் வேறு யாரும் வரக்கூடாது' என்று நடேசனும் முருகனும் சொல்லிவிட்டனர். இது போன்ற வார்த்தைகளை அமராவதி ஒரு நாளும் ரேவதியிடம் சொன்னதில்லை.

ரவி தனது சந்தேகப் புத்தியால்தான் ரேவதியை வேலைக்கு அனுப்பவில்லை, 'குடிக்காதே' என்று சொன்னதற்காக ரேவதியை அடிக்கும் ரவி ரேவதி புத்தகம் படித்தாலும் "குடும்பம் நடத்த வந்தியா, புக்க படிக்க வந்தியான்னு கேட்டு அடிப்பான்" என்னும் அமராவதியின் வார்த்தைகள் ஒரு பெண் கல்வி, அறிவு, பொருளாதாரம் என உயர்ந்து நின்றாலும் கணவன் என்கிற ஒரே அதிகாரத்தைக் கொண்டு எந்த அற்பமான ஆணும் அப்பெண்ணின் உடலின் மீதும் உணர்வின் மீதும் எளிதில் வன்முறை செலுத்திவிட முடிகிறது என்பதை உணர்த்துகிறது (Imayam, 2021).

ரவிதான் ரேவதியைத் தீயிட்டுக் கொளுத்தியிருப்பான் என்று உறுதியாக நம்புகிறார் அமராவதி. "அவன அவ விட மாட்டாங்க. பட்ட அடியும் ஒதயும் மறந்திடுமா? மூஞ்சிலியே காறித் துப்புனது, ஒங்கப்பனும் ஒங்கண்ணனும் புடுங்குவானான்னு கேட்டது, எல்லாத்தயும் மறந்திடுவாளா? குடிச்சிப்புட்டு நிதானமில்லாம வந்து 'வாயில சோத்த வையிடி'ன்னு எத்தன முற சொல்லியிருக்கான். வாயிலிருந்த சோத்த அப்பிடியே முகத்தில துப்பியிருக்கான். சல்லிப் பயகிட்ட மாட்டிக்கிட்டியே'ன்னு தெருச் சனம் சொன்னத மறந்திடுவாளா? அடி ஒத வாங்கிக்கிட்டு எங்க போறதின்னு தெரியாம கோயில்லப் போயி ஒக்காந்து அழுதுட்டு வந்தாளே. அதக் கூடவா மறந்திடுவா? பத்து நாளக்கி முன்னால் நடந்த சண்டயில அடிச்ச அடியயும் ஒதயயும் வாங்கிக்கிட்டு, போறதுக்கு எடமில்லாம பஸ் ஸ்டாண்டுவர ரெண்டு தடவ சும்மாவே நடந்து போயிட்டு வந்தாளே. அத மறந்திடுவாளா?" என ரேவதி ரவி செய்த கொடுமைகளை நீதிபதியிடமும் காவலர்களிடமும் சொல்லி ரவியைச் சிக்கவைப்பாள் என்று உறுதியாகச் சொல்கிறார்

அமராவதி (Imayam, 2021). இதுவரை ரேவதி அனுபவிக்கும் கொடுமைகளில் நூற்றில் ஒன்றைக்கூட அவள் நடேசனிடமோ முருகனிடமோ சொன்னதில்லை. தன் மகளின் துன்பத்தை நினைத்து நினைத்து அவள் அனுபவித்த கொடுமைகளை ஒவ்வொன்றாகப் புலம்புகிறாள்.

இந்தப் பின்னணியில்தான் தனக்கு நடந்த எந்தக் கொடுமைகளையும் சொல்லாமல் தனக்கு நிகழ்ந்தது எதிர்பாராமல் நடந்த தீ விபத்தே தவிர அது கொலையோ தற்கொலையோ அல்ல என்று ரேவதி காவலரிடம் வாக்குமூலம் கொடுத்ததை ஏற்றுக்கொள்ள முடியாமல் அமராவதி பேசும் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. "ஆறு, ஏழு வருஷமாவா ஒருத்தி பெத்த தாயெக் கொல நடுங்கவைப்பா? என்னெப் போல புள்ளை பெத்தவங்க ஒலகத்தில யாரும் இல்லெ. இந்த நெலமயிலயும் அவளுக்குப் புருசன் ஆச போவல பாரு. ரோட்டுப் பொறுக்கிக்கே இம்மாம் விசுவாசம் காட்டிட்டா" என்று தன் பெண் பட்ட துன்பங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லையே என்று குமுறுகிறாள் (Imayam, 2021). ரேவதி தீயில் வெந்துவிட்டாள் என்று தெரிந்த நொடியில் இருந்து உண்ணாமல் உறங்காமல் எப்பொழுதும் அவள் நினைவாகவே தன்னை மறந்து இருந்தவர்தான் அமராவதி.

ரவியைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று ரேவதி பிடிவாதம் காட்டத் தொடங்கியது முதல் ரேவதியை வெறுத்த நடேசனும் முருகனும் மருத்துவமனையில் அவளைப் பார்க்கவிடுமாறு வாயிற்காவலரிடம் கெஞ்சிக்கொண்டிருந்ததைப் பார்த்த அமராவத்திற்குக் கோபம் கொந்தளிக்கிறது. "அவ பேச வந்தப்பலாம் பேயக் கண்ட மாதிரி ஒதுங்கிஒதுங்கிப் போனிங்க. அவ நடக்காத தெருப் பக்கமா பாத்துப்பாத்துப் போனிங்க… இப்ப வந்து நிக்குறிங்க. ஒங்க கோபம்தான் அவள எரிச்சிடிச்சி. இன்னிக்கி வந்து பணத்தத் தூக்கிக்கிட்டு அலயுறிங்களே. அலஞ்சி என்னாத்துக்கு ஆவப்போவுது?" என்று ரேவதியின் துன்பத்துக்குத் தன் கணவனும் மகனும்கூட காரணம் என்று சொல்கிறாள் (Imayam, 2021). "இத்தினி வருசத்தில் ஒரு தடவயாவது அவனக் கூப்புட்டு 'ஒழுங்கா இரு டா'ன்னு சொல்லி மிரட்டியிருந்தா எம் பொண்ணு நெருப்புல வெந்திருக்க மாட்டா. அந்த நாயியும் அடங்கி இருந்திருக்கும். ஆட்டோ ஓட்டுற பய, குடி காரப் பய, மரியாத தெரியாத பயன்னு ஒதுங்கிஒதுங்கிப் போனிங்க. அதனாலதான் எரிச்சிப்புட்டான்" என்று ஆண்கள் தங்கள் கௌரவம், நலன் சார்ந்து எடுக்கும் முடிவுகளில், காட்டும் வீம்புகளில் சிக்கிச் சீரழிவது பெண்கள்தானே என்கிற எதார்த்தத்தை அமராவதியின் வார்த்தைகள் உணர்த்துகின்றன (Imayam, 2021).

ரவிமீது ஏன் புகார் கொடுக்காமல் விட்டீர்கள் என்று துணை ஆய்வாளர் செல்வம் கேட்கும்பொழுது, "போலீசு, கோர்ட்டுக்குப் போறதவிட எந்தச் சிக்கலும் இல்லாம எம் பொண்ணு பொணம் சுடுகாடு போயி சேரணும் சார்" என்று திட்டவட்டமாகச் சொல்கிறார் அமராவதி (Imayam, 2021). ரேவதியின் உடலைப் பிணவறையில் இருந்து கொண்டுவந்து அமரர் ஊர்தியில் ஏற்றும்பொழுது அமராவதி பிணத்தின் முகத்தோடு தன்னுடைய முகத்தை வைத்து அழுத்தினாள். "தூங்கிட்டியா அம்மா? தூங்கு. இனி ஒனக்கு எந்த தொந்தரவும் இல்ல. தப்பு செஞ்சிட்டோமேன்னு இனி நீ அழுவ மாட்ட. எந்த நாயும் இனி ஒன்ன அடிக்க முடியாது. ஓதைக்க முடியாது. இனி அடிக்குப் பயந்துகிட்டு எதுத்த வீடு, பக்கத்து வீடுன்னு நீ ஓடி ஒளிய வேண்டியதில்ல. அம்மாவுக்குத் தெரிஞ்சிடுமோன்னு எதயும் நீ மனசுல போட்டு மறைக்க வேண்டியதில்ல. 'எங்கம்மாகிட்ட சொல்லிடாதிங்க'ன்னு யாருகிட்டயும் கெஞ்ச வேண்டியதில்ல." என்று மகளுக்கான தன் இறுதி வார்த்தையைச் சொல்கிறாள் (Imayam, 2021). பெண்ணாகப் பிறந்து தன் விருப்பப்படி ஏற்றுக்கொண்ட வாழ்க்கையில் பொறுப்பற்ற குடிகாரக் கணவன், ஒழுக்கத்துடன் கௌரவம் பார்த்து ஒதுங்கி நடக்கும் அப்பா, அண்ணன், இவர்களுக்கிடையே சிக்கித் தவிக்கும் தாய் என யாருக்கும் பயந்து ஒடுங்கி இனி ரேவதி வாழ வேண்டியதில்லை என்னும் வார்த்தைகள் பெண்களின் உடலையும் உணர்வையும் சித்தரவதை செய்துகொண்டிருக்கும் ஆண்மையச் சமூகத்துக்கு விழும் சவுக்கடி.

"இப்ப என் நெஞ்சு கடலப்போல குதிக்கல. நெருப்பப்போல எரியல. நீ தூங்கிட்டடல்ல. அதனாலதான் என் நெஞ்சு அடங்கிப்போச்சி. ஓடம்பு குளுந்துபோச்சி. நான் எதுவும் செய்யல. என்னால எதுவும் செய்ய முடியல" என்னும் வார்த்தைகள் ஒரு தாயின் மயான அமைதியை உணர்த்துகிறது (Imayam, 2021). இந்நாவலில் ரவி, நடேசன், முருகன் என அனைவரும் தன்னை, தன் குடும்ப கௌரவத்தை முக்கியமானதாகக் கருதினர். ஆனால் அமராவதி மட்டும்தான் தன்னைவிட, தன் மானத்தைவிட ரேவதிதான் முக்கியம் என்று கருதிய ஒரே உயிர்.

## ரவி

குடிகாரன், வம்புக்கு நிற்பவன், பெண்களை ஒரு பொருளாக மட்டுமே கருதுபவன் என்பதாகத்தான் பெரும்பாலும் நாவலில் இவனது பாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளது. ரவியின் தாயும் அவனை ஒழுக்கக்கேடானவன் என்றே சொல்கிறார் (Imayam, 2021). தன்னைவிட இரண்டு வயது மூத்த அக்கா திருமணம் ஆகாமல் வீட்டில் இருக்கும்போதே ரேவதியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டவன் ரவி. ஆனால் தன் அக்காவையோ தனது ஐந்து வயது மகளையோ யாராவது காதலித்தால் அவர்களைக் கொன்றுவிடுவேன் என்று சவால் விடுபவனும் ரவிதான். ஓர் ஆணாய் ஒரு குடும்பத்துக்கு செய்ய வேண்டிய கடமைகளுக்குப் பொறுப்பு ஏற்காத ரவி ஓர் ஆணாய் குடும்பத்தில் அதிகாரம் செலுத்துவதை மிகவும் விரும்புகிறான் என்பதையே இந்நிகழ்வு காட்டுகிறது.

ரேவதியை ஜிப்மர் மருத்துவமனையில் சேர்த்தபிறகு தன் நண்பனுடன் இருக்கும் ரவி காவல்துறை தன்னைத் தேடுகிறதா என்று கண்காணித்துக்கொண்டே, "தாலி கட்டிக்கிட்டு வந்த ஒரு மாசத்திலேயே என்னிக்கா இருந்தாலும் ஒன்னே ஒரு நாளக்கி ஜெயிலுக்கு அனுப்பாம இருக்க மாட்டன்னு சொல்லக்கிட்டேயிருந்தா அந்த முண்டச்சி. இன்னிக்கு செஞ்சுடுவாபோல இருக்கு என்று புலம்புவதோடு "அவளப் பாக்காம ஒரு ஆட்டோக்காரன் மவளக் கட்டிக்கிட்டு நிம்மதியா இருந்திருப்பன்" என்று சொல்லிவிட்டு அழுகிறான் (Imayam, 2021). ரவிக்காகச் செல்வாக்குள்ள தன் குடும்பத்தையும் உறவுகளையும் தூக்கி எறிந்துவிட்டு வந்தவளை, தான் எரிந்து வெந்துக் கிடக்கும் நிலையிலும் ரவியைப் பற்றிக் குறை சொல்லாதவளை ரவி இவ்வாறு குற்றம் சுமத்துகிறான். ஆணாதிக்க நோயும் குடிநோயும் ஒன்று சேர்ந்து ஒரு மனிதனை என்னவாக மாற்றுகிறது என்பதற்கு ரவி இந்நாவலில் சிறந்த சான்றாக விளங்குகிறான்.

"நாலு நாளக்கி முன்னால அவங்கம்மா ஆட்டோவுக்கு டியூ கட்ட நாப்பதாயிரம் கொடுத்தாங்க. அதுல ஐநூறு எடுத்துக்கிட்டுப் போயி ரெண்டு மணிக்கு சரக்கு சாப்புட்டுட்டு வந்துட்டன், 'எங்கம்மா டியூ கட்டத்தான பணம் கொடுத்தாங்க. முப்பதாம் தேதி நான் டியூ கட்டணுமில்ல. அதுலயிருந்து எடுத்துக்கிட்டுப் போயி எதுக்கு குடிச்ச? நீ இதே மாதிரி செஞ்சிக் கிட்டேயிருந்தா நான் செத்திடுவன்'னு சொன்னா. நான் வெளயாட்டுக்கு 'சரி. செத்துப்போ'ன்னு சொல்லிட்டன். கொஞ்ச நேரம்கூட இருக்காது. எல்லாம் முடிஞ்சி போச்சி" என்று சொன்ன ரவி குலுங்கிக்குலுங்கி அழுதான் (Imayam, 2021). இது ரேவதியின் அண்ணி அருண்மொழிக்கும் ரவிக்கும் நடக்கும் வாதத்தில் ரவி கூறியது. ஆனால் அவனே காவல்துறையிடம் எழுதிக் கொடுக்கும்போது இச்சம்பவம் எதிர்பாராமல் நடந்த சம்பவம் என்று வழக்கறிஞரின் உதவியோடு எழுதித் தருகிறான். அதேபோல் ரேவதியைப் பார்க்க மருத்துவமனைக்கு வரும் தன் தாயை வழக்கறிஞரைச் சென்று சந்திக்குமாறு அனுப்பிவைக்கிறான்.

பலராலும் குற்றம் சாட்டப்படும் ரவி தனக்கும் அருண்மொழிக்கும் இடையிலான வாதத்தில் ரேவதி குடும்பத்தாரைக் குற்றம் சாட்டுகிறான். அருண்மொழிக்கும் ரவிக்கும் இடையிலான வாதம் மிகவும் முக்கியமானது. ரவி தனது பக்க நியாயத்தை விளக்க இந்த நாவலில் உள்ள ஒரே இடம் இதுதான். "நீங்க எல்லாரும் பெரிய படிப்பு படிச்சவங்க. பெரிய வேலயில இருக்கிறவங்க. பணம் உள்ளவங்க, எல்லாம் இருக்கு ஒங்ககிட்ட. ஆனா, பெரிய மனசு மட்டும் இல்ல" "எங்கிட்ட பேசுனா என்னா, என்னெ அந்த வீட்டுல விட்டா என்னா? எம் புள்ளைங்ககிட்ட பேசுனா என்னா? இதுதான் அவளுக்கு வருத்தமா இருந்துச்சி, அதனாலதான் எல்லாரயும் நான் திட்டுவன். அதனாலதான் எனக்கும் அவளுக்கும் தெனம்தெனம் சண்ட நடக்கும். நான் சல்லிப் பயதான். இல்லன்னு சொல்லல. சல்லிப் பய சல்லிப் பயலாத்தான் இருப்பான். ஆனா, பெரிய மனுசன் பெரிய மனுசனா இருக்கணுமா இல்லியா?" "நான் தெனம் அவ ஒடம்புலதான் அடிச்சன். நீங்க மனசுல அடிச்சிங்க" "எங்கிட்ட பணம் இல்ல. ஒங்ககிட்ட இருந்துச்சி. அதனால நீங்க எம்மாம் அசிங் தப்படுத்தினாலும் ரேவதி ஒங்ககிட்ட வந்துகிட்டிருந்தா. பணத்தாலதான் அவ அசிங்கப்பட்டா. அவளுக்கு இனிமே அந்த அசிங்கம் இல்ல" என்று ரேவதி குடும்பத்தாரின் தவறுகளை நுட்பமாகச் சுட்டிக் காட்டுகிறான் ரவி. இதைக் கேட்ட அருண்மொழி "புத்திசாலித்தனமான இந்தப் பேச்சில்தான் ரேவதி விழுந்திருக்க வேண்டும் என்று நினைத்தாள் (Imayam, 2021). 'தண்ணி போட்டாதான் மிருகமாக இருப்பான். சும்மா இருக்கும்போது

சொல்ற வேலையெல்லாம் செய்வான். அவனப் புரிஞ்சிக்க முடியாது’ என்று ரேவதி ஒருமுறை சொன்னது நினைவுக்கு வந்தது” (Imayam, 2021).

## நடேசன், முருகன்

ரேவதியின் தந்தையான நடேசன் ரேவதியின் காதல் பற்றித் தெரிந்ததும் அமராவதியின் மூலம் ரேவதியின் காதலைக் கலைக்க நினைக்கிறார். ஒரு கட்டத்தில் அவரே ரேவதியிடம் பேசுகிறார் (Imayam, 2021). இப்பகுதி கம்பராமாயணத்தில் மந்தரை (கூனி) உளவியல்ரீதியாக எவ்வாறு கைகேயியின் மனத்தைக் கலக்கினாளோ அதுபோல் அமைந்திருக்கும்

அமராவதி நடேசன் ஒதுங்காமல் இருந்திருந்தால் ரேவதிக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று ஆத்திரப்படுகிறார். அதற்கு “நான் இத்தினி வருசமா ஒதுங்கிப் போனதுக்குக் காரணம் எம் பொண்ணு தொந்தரவு இல்லாம இருக்கணும், உசுரோட இருக்கணும்னுதான். நான் ஒண்ணு சொல்ல, அவன் ஒண்ணு சொல்ல, பேச்சு முத்திப்போயி அசிங்கமாயிட்டா ஒங்கிட்ட பேசுறதும் நின்னுபோயிடும். நீ கொடுக்கிற காசும் இல்லன்னா இன்னும் கஷ்டப்படுவான்னு தான் விலகிப் போனன். எனக்கும் அவனுக்கும் சண்டயாயிட்டா நம்ப அப்பாவ அசிங்கப்படுத்திட்டானேன்னு அவ பெரிய சண்டயாப் போட்டு, அதனால அவன் அதிகமா அடிப்பானேன்னு ஒதுங்கிப்போனன்" என்று கண்ணீருடன் தன் நிலையை விளக்குகிறார் (Imayam, 2021). நடேசனும் முருகனும் ரேவதி உயிருடன் இருக்க எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று செயல்படுகின்றனர். நடேசன் பத்து இலட்சம் பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஏங்குகிறார். ஆனால் அது செல்லாத பணம்.

நடேசன் அறச்செயலகளோடு வாழ்ந்துவரும் தன் மகளுக்கு ஏன் கொடுந்துயரம் ஏற்படுகிறது? என்று நோகிறார். யாரையும் சுடுசொல் பேசாதவர், ரவியிடம் "இப்பிடியாடா எம் பொண்ண ஒங்கிட்ட கொடுத்தன்? நாசமாப்போனவனே. உள்ளாரப் போயி எம் பொண்ணப் பாருடா போ. எட்டப் போயிடு. கொல பண்ணிடுவேன். ராஸ்கல். தன்ன அறியாத பயடா நீ. நாயிடா நீ. ஒன்ன எப்பியோ கணக்கு தீத்திருக்கணும். வுட்டுட்டன் என்று தகாத வார்த்தையையும் பேசுகிறார் (Imayam, 2021).

ரேவதி ஏன் வாக்குமூலத்தை மாற்றிக் கொடுத்தாள் என்பதைக் கேட்டே தீரவேண்டும் என்று கொந்தளித்த முருகன் தன் தங்கை ரேவதியைப் பார்த்ததும் அவளது நிலையை எண்ணிக் கதறுகிறான். தன் தங்கையின் இறுதி ஊர்வலம் அமைதியாக நடைபெற வேண்டும் என்பதற்காக ரேவதி உடலை ரவி வீட்டுக்குக் கொண்டுசெல்ல சம்மதிக்கிறான். ரேவதியின் நிலை பற்றி அறிந்துவந்த உறவினர்களையும் நண்பர்களையும் "இவ்வளவு தொலைவு வந்தும் அவளைப் பார்க்க முடியாதா? ஏன் ரவிமீது வழக்கு தொடுக்கவில்லை? போன்ற அபத்தமான கேள்விகளுக்குப் பதில் சொல்லும் மனநிலையோ தெம்போ இல்லாமல் நடேசனும் முருகனும் அவர்களுக்கு காபி, சாப்பாடு வாங்கிக் கொடுத்து வழியனுப்பும் முறை மிக நுட்பமானது.

## ஆய்வுப் பயன்கள்

தீக்குளித்தவரோடு அவரது குடும்பமும் படும் துன்பங்கள், மருத்துவமனை, காவல்துறை நடைமுறைகள், நோயாளிகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களின் அர்த்தமற்ற கேள்விகள், மருத்துவர்கள், செவிலியர்களின் சிக்கல்கள் ஆகியவற்றை இந்த நாவல் எவ்வாறு உணர்த்துகிறது என்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. தனது இரண்டு குழந்தைகளைக் கூட விட்டுவிட்டுத் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொள்ளும் ரேவதிக்கு ஏற்பட்ட துன்பங்கள் என்ன? அதற்குக் காரணங்கள் யாவை? என்கிற புரிதலை இக்கட்டுரை உருவாக்குகிறது. இந்த நாவலில் வரும் குடும்ப ஆண்கள் யாரும் மற்றவர்களின் உணர்வு, மனநிலை குறித்த அக்கறையின்றி சமூகம் வரையறுத்த கௌரவம், தனது சுயநலம் பற்றிய ஓர்மையுடனே செயல்படுகின்றனர். ஆண்களின் இத்தகைய செயல்பட்டால்தான் தான் விரும்பிய ஆணைத் திருமணம் செய்த ரேவதி தொடர் துன்பங்களுக்கு ஆளாகிறாள். அவளைத் தன் குடும்பச் சொத்தாகக் கருதி அதிகாரம் செலுத்த முயலும் ஆண்கள் யாரும்

அவளது துயரத்தைத் துடைக்க வரவில்லை. அவளது தாய் மட்டுமே உதவியாக இருந்தாள். ஆண்மையச் சமூகமாகவே தொடர்ந்து கொண்டிருக்கும் நம் சமூகத்தில் பெண்களின் நிலை, உணர்வுகள், வலிகள் பற்றிய ஆவணமாக இந்நாவல் சமூகத்தைப் பிரதிபலிக்கிறது என்பதை இக்கட்டுரை மூலம் அறியலாம். ரேவதி, அமராவதி மட்டுமே ஒரு பிரச்சினையின் இரண்டு தரப்பு மனநிலையையும் ஒப்பிட்டுப் பார்த்து இரக்கம் கொள்கின்றனர். இரு குடும்பத்து ஆண்களும் இப்படி பிறர் உணர்வைப் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து இருந்தால் ரேவதி வாழ்ந்திருப்பாள். ஒவ்வொருவரும் பிறர் உணர்வை, வலியைப் புரிந்துகொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் வாழ்க்கையே நிம்மதியாக இருக்கும் என்கிற புரிதலை இக்கட்டுரை ஏற்படுத்துகிறது.

## முடிவுரை

செல்லாத பணம் நாவலை வாசிப்பவர்களுக்கு தீக்குளித்து தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் வராது. தனியார் மருத்துவமனை போன்ற கட்டமைப்புடன் கட்டணமின்றி சிறந்த சேவையை அளிக்கும் ஜிப்மர் மருத்துவமனை, ஏதோ ஒரு பெண்ணின் உடலை வாங்கக் காலத் தாமதம் ஆகிவிடுமோ என்று பதறி ஆவணமில்லாத காரையும் சீக்கிரம் போ என்று அனுமதிக்கும் காவல்துறையினர், தாயும் செய்யத் தயங்கும் சேவையைச் செய்யும் செவிலியர், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதுடன் உணர்சசிபூர்வமான உறவுகளின் அபத்தமான கேள்விகளையும் பொறுமையாகக் கடந்து செல்லும் மருத்துவர்கள், பாதுகாவலர்கள், தன் ஆசிரியருக்கு உதவுவதற்காகக் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணையும் அரசியல்வாதிகள் போன்றோர் எவ்விதப் பிரதி பலனும் எதிர்பாராமல் ரேவதிக்கும் ரேவதி குடும்பத்துக்கும் செய்யக்கூடிய உதவி இத்துறையினர் குறித்த பொது மனநிலையை மாற்றக்கூடிய வகையில் உள்ளது. எவ்வித அலங்காரச் சொற்களோ வர்ணனையோ இன்றி ஒரு பெண்ணின் வலியை, வலி நிறைந்த வாழ்வைத் துன்பியல் காப்பியமாக்கியுள்ளார் இமையம். தான் எடுத்துக்கொள்ளும் களன் மற்றும் கதாபாத்திரங்களின் அனுபவங்கள் ஆகியவற்றை ஆவணமாகக் கொள்ளுமளவிற்குத் தனது முந்தைய நாவல்களை போலவே இந்நாவலிலும் இமையம் துல்லியமாகப் பதிவு செய்துள்ளார். இவ்வாறான துல்லியம் வாழ்வனுபவம் அல்லது சிரத்தையான ஆய்வினூடாக மட்டுமே பெறக்கூடியவை. இமையத்தின் புனைவுகள் கதாபாத்திரங்களின் உரையாடல், அவர்களது எண்ண ஓட்டங்கள் மற்றும் எழுத்தாளனின் குறுக்கீடு அல்லது வர்ணனை என மூன்று மொழியாடல்களில் அமைந்துள்ளன. ஆசிரியரின் குறுக்கீடு தனித்து துருத்திக்கொண்டு நிற்காமல் கதாபாத்திரங்களின் மன ஓட்டத்தினூடே கலந்து நிற்கிறது. ஒருவகையில் இது வாசிப்பிற்கு இடையீடின்றி அமைகிறது. இவரது நறுக்கிக் கோர்க்கப்பட்ட, மிகக் குறைவான சொற்களைக்கொண்ட செறிவான உரையாடல்கள் மதிக்கத்தக்கது. இவரது கதைச்சொல்லலிடையே நடைபெறும் வெட்டு, ஒட்டுக்களும், நிகழ்வுகளைச் சித்திரிக்கும் தன்மையும் நேர்த்தியான திரைப்படங்களை நினைவூட்டுகின்றன. தவிரவும் நேர்த்தியான சினிமாக்களைப் போலவே இந்நாவல் உட்பட இவரது புனைவுகள் மனித துக்கங்களையே துன்பியல் முடிபுகளையே பெரும்பாலும் கொண்டிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

## References

Imayam, (1998) Koveru Kazhuthaigal, Kriya Pathippagam, Chennai, India.

Imayam, (1999) Arumugam, Kriya Pathippagam, Chennai, India.

Imayam, (2004) Man Baaram, Kriya Pathippagam, Chennai, India.

Imayam, (2006) Sedal, Kriya Pathippagam, Chennai, India.

Imayam, (2008) Video Mariamman, Kriya Pathippagam, Chennai, India.

Imayam, (2021) Selllaatha Panam, Kriya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License